SOND

இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.
T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-www.sond.lk

Face book:- Social Organizations Networking for Development - (SOND)

# மாதாந்த அறிக்கை புரட்டாதி, 2014

## Social Organizations Networking for Development

RKM Road
Akkaraipattu

No. 19, Saravana Road
Kallady Batticaloa.

60" Arasady Road
Jaffna.

இதழின் உள்ளே

1. மட்டக்களப்பு
2. யாழ்
3. அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களினுடைய செயற்பாடுகள்

"We all will Create a Better World"

SOND

# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

**எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக் கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல். (Create a Conducive Society for Good Environment for the Future).**

**காலநிலை மாற்றமும் சூழல் பாதுகாப்பும் (Climate Change & Environmental Protection)**

காலநிலை மாற்றம் தொடர்பான செயற்பாடுகளில் காலநிலை மாற்ற செயற்பாட்டுக் குழுவினது 5வது அமர்வானது துறைசார்ந்த அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் 30 பேரை உள்ளடக்கியதாக நடைபெற்றது. இதன் போது நீர் விரயம் மற்றும் நீர்ச் சிக்கனம் தொடர்பாக பணிப்பாளர் அவர்களால் ஒரு சமர்ப்பணம் இடம்பெற்றது மேலும் அனர்த்தங்களுக்கு தாக்குப்பிடிக்கக் கூடிய சமூகத்தைக் கட்டியெழுப்புதல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளை முதற் கட்டமாக 5 பாடசாலைகளிலும் 5 சமூகமட்ட அமைப்புக்களுக்கும் நடத்துவதெனவும், காலநிலை மாற்றம் தொடர்பாக இலத்திரனியல் வலையமைப்பொன்றை உருவாக்க வேண்டுமென்றும், காந்தி பூங்காவில் காலநிலை மாற்றம் தொடர்பான காணொளிகளை காண்பிக்கலாம் எனவும் மட்டக்களப்பில் சுற்றுச் சூழல் பாதிப்பு மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பாகப் பல்கலைக்கழக மட்டத்தில் ஓர் கூட்டத்தினை நடத்துவது என்றும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டதுடன் விவசாயிகள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் மற்றும் வரட்சி ஏற்படுத்தும் தாக்கங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.








**“We all will Create a Better World”**

SOND

எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக் கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல். **(Create a Conducive Society for Good Environment for the Future).**

அனகி அடுப்புக்கள்

இயற்கை முறை விவசாயத்தினை மேற்கொள்ள ஆர்வமுள்ள 5 விவசாயிகளுக்கான பொருட் கொள்வனவிற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றது. அத்துடன் பயனாளிகளுக்கான 100 அனகி அடுப்புக்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் ஆரையம்பதியில் 40 பயனாளிகளுக்கு இவை விநியோகிக்கப்பட்டுள்ளது.





அனர்த்த முன்னாயத்த ஒத்திகை

பட்டிப்பளையிலுள்ள மகிழடித்தீவு கிராமத்தில் அனர்த்த முகாமைத்துவக் குழுவிற்கான இரண்டு நாட் கொண்ட அனர்த்த முன்னெச்சரிக்கை, முகாம் முகாமைத்துவப் பயிற்சியும் அனர்த்த முன்னாயத்த ஒத்திகையும் நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் 27 பேர் பங்குபற்றியதுடன் அனர்த்த முன்னாயத்த ஒத்திகை நிகழ்வில் 200 ற்கு மேற்பட்ட கிராம மக்களும் கலந்து கொண்டிருந்தனர்.







விவசாய அமைப்புக்களிற்கான கலந்துரையாடல்

மேலும் விவசாய அமைப்புக்களை பலப்படுத்தும் நோக்கில் பட்டிப்பளை மற்றும் மண்டபத்தடி போன்ற இடங்களைச் சேர்ந்த 5 விவசாய அமைப்புக்களைச் சேர்ந்த 6 பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் கடந்த 29.10.2014 அன்று அலுவலகத்தில் இடம்பெற்றது. இக் கலந்துரையாடல் பணிப்பாளர் அவர்களால் நடாத்தப்பட்டதுடன் இவ் விவசாய அமைப்புக்களின் தற்போதைய நிலை, இவ்வமைப்புக்களை புணருத்தாரணம் செய்ய வேண்டியதன் முக்கியத்துவம் மற்றும் விவசாயிகள் எதிர் நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல்களும் இடம்பெற்றன.

**“We all will Create a Better World”**

## கணணி வகுப்பு

| NO | Practical | | Total |
|---|---|---|---|
| | Male | Female | |
| Children | 04 | 14 | 18 |

### கிராமமட்ட அமைப்புக்களுக்கான அனுபவப் பகிர்வு

13.09.2014 அன்றுதேசியமொழிகள் திட்டத்தின் பிரகாரம் SONDஅமைப்பின் ஏற்பாட்டில் அம்பாறைமாவட்டசமூகஅமைப்புக்களின் பிரதிநிதிகள்,யாழ் மாவட்டசமூகஅமைப்புக்களின் அரசசார்பற்றசமூகஅமைப்புக்களின் பொருளாதாரமுயற்சிகளினைகற்றறியும் நோக்குடன் வருகைதந்திருந்தனர். இவ்வருகையின் போதுமுதல் நாள் 13.09.2014 அன்றுயாழ் அரசசார்பற்ற இணையத்திற்கும் புங்குடுதீவுசர்வோதயத்திற்கும் விஜயத்தினைமேற்கொண்டுதமதுஅனுபவங்களைபகிர்ந்துகொண்டதுடன் மறுதினம் 14.09.2014 அன்றுயாழ் மாவட்டத்திலுள்ளகீரிமலை, ஜம்புகோளப்பட்டினம், நூலகம்,மற்றும் எமதுSONDஅமைப்பின் நீர்வேலிமாதிரி இயற்கைவிவசாயப் பண்ணை,யாழ் சக்திஉற்பத்திநிலையம் என்பனபார்வையிடப்பட்டிருந்தது. அப்போதுபிடிக்கப்பட்டபடங்கள் வருமாறு.





**"We all will Create a Better World"**

**MRE செயற்றிட்டம்**

**இம்மாதம் மக்களின் ஆபத்தான சூழ்நிலையை கருத்திற் கொண்டு பகுதிவாழ் மக்களை விழிப்புணர்வூட்டும் வகையில் MRE களப்பணியாளர்களால் குடாரப்பு, நாகர்கோவில் மற்றும் அக்கரை பிரதேசங்களில் பொருத்தமான இடங்களில் MRE விழிப்புணர்வூட்டும் வெனர்கள் பொருத்தப்படுவதனைபடங்களில் காணமுடிகிறது.**








**தனங்கிளப்பு பகுதியில்MREகளப்பணியாளர்கள் மக்களைசந்தித்து MRE விழிப்புணர்வு வழங்குவதைபடத்தில் காணலாம்.**



இம்மாதம் கொல்லங்கலட்டி, தனங்கிளப்பு, மாவிட்டபுரம் பகுதிகளில் மக்களினால் இனங்காட்டப்பட்டு எமது MRE களப்பணியாளர்களினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள பலவகையான வெடிக்காத வெடிநிலையில் உள்ளவெடி பொருட்களை படங்களில் காணக்கூடியதாகஉள்ளது.





SOND

**MRE செயற்றிட்டம்**

இத்தாவில் பகுதில் மிதிவெடி பாதிப்புக்குள்ளாகிய நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நபரிடம் எமது SOND அலுவலக MREபணியாளர்கள் சென்று அவரைசந்தித்து தகவல் பெறப்பட்டபோது எடுக்கப்பட்ட படத்தினை படத்தில் காணலாம்.





“We all will Create a Better World”

## தகவல் வள நிலையம்

இம்மாதம் எமது SOND அலுவலகத்திலுள்ள வளநிலையத்தில் சிறுவர்கள், இளைஞர்கள்,முதியோர்கள் உட்பட26பேர்களினால் 11 தலைப்புக்களில் 73புத்தகங்கள் பாவனைக்குட்படுத்தப்பட்டுள்ளதுடன் 5 தலைப்புக்களில் 14 CDகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.



மற்றும் இம்மாதம் எமதுநூலகத்தில் புதிதாக 13அங்கத்தவர்கள் இணைந்துள்ளனர்.

அத்தோடுநடமாடும் நூலகம் பாடசாலை மட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்தவகையில் இம்மாதம் உயரப்புலம், ஞானபண்டிதம் ஆகிய இரண்டு பாடசாலைகளில் 10 புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது.



# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாடுகள்

## பாலர் பாடசாலை மாதாந்தக் கலந்துரையாடல்

முன் பள்ளி ஆசிரிர்களின் பாடசாலைச் செயற்பாடு, முன்னேற்றத்தினை அறியும் பொருட்டு 2014.03.19 ம் திகதிஅன்றுமாலை 03.00 மணிக்குSONDஅமைப்பின் பணியாளரான தி.ஜெனிதாஅவர்களின் தலைமையில் SOND பயிற்சி மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் 15 முன்பள்ளியைச் சேர்ந்த 29 ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

## நிதியின்றிய செயற்திட்டம்

அரசசார்பற்ற நிறுவனமென்றால் அது நிதியோடுதான் செயற்படும் என்ற மாயை கற்றவரிடையே கூட உள்ளது. இக் கருத்தினை மாற்றி நிதியின்றி சிலரின் நேரத்தையும் எமது வளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற்திட்டங்கள் இவற்றிற்கு நல் உதாரணங்களாகும்.

### சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினைமையமாகக் கொண்டு கடந்த 2011.மார்ச் மாதம் தொடக்கம் தற்போதுவரை சிறுவர் செயற்திட்டம் எமது அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு,அக்கரைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்டதமிழ் , முஸ்லீம்,சிங்கள இனத்தினைச் சேர்ந்த 21 ஆண், 21 பெண் உள்ளடங்கலாக 42 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்.

### சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்டவிசேடசெயற்பாடுகள்.

1. இம் மாதம் சிறுவர்களினால் நான்குநடமாடும் நூலகசேவைமேற்கொள்ளப்பட்டது. இதன் போது 191 புத்தகங்கள்சிறுவர்களால் வாசிப்புக்கெனவழங்கப்பட்டுள்ளது.

### SONDஅமைப்பினால் மேற்கொள்ளப்பட்டவிசேடசெயற்பாடுகள்.

01. சிறுவர்களின் ஓய்வுநேரங்களைபயனுள்ளவழியில் கழிக்கும் வகையில் வாராந்த கலந்துரையாடலின் முடிவின் போதுசிறுவர்கள் விளையாடுவதற்காக கரம்போட்,கிரிக்கெட் பட்,ஸ்பிங் ஆகிய மூன்று வகையான விளையாட்டுப்பொருட்கள் 07 தடவைகள் வழங்கப்பட்டது.





SOND

## முன்மாதிரி பண்ணை

இயற்கை முறையிலான விவசாயம் தொடர்பான விழிப்புணர்வினை மக்களுக்கு ஏற்படுத்தலினை நோக்காகக் கொண்டு அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசசெயலாளர் பிரிவில் தங்கவேலாயுதபுரம் எனும் கிராமத்தில் SOND அமைப்பினால் 11ஏக்கர் விவசாயப் பண்ணையானது செயற்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது பண்ணையில் தென்னை,வாழை, பழமரங்கள், நிலக்கடலை மரக்கறி பயிரினங்கள் நடுகை பண்ணப்பட்டு விற்பனைக்காக மக்களுக்கு வழங்கப்படுகின்றது







## இளையோரிற்கான கலந்துரையாடல்

இளையோர் கலை விழா தொடர்பான கலந்துரையாடல் 2014.09.01 ல் அக்கரைப்பற்று SOND அலுவலகத்தில் பணியாளர் நிசாந்தியினால் நடாத்தப்பட்டது. இதில் 13 இளையோர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்



**"We all will Create a Better World"**

SOND

## வளநிலையப் பயன்பாடு

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலகசேவைசெய்யப்பட்டுவருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர்,நிறுவனப் பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் 13 தலைப்பில் 191 புத்தகங்களை பயன்படுத்தியுள்ளார்கள்.

## விவசாய அமைப்புடனான கலந்துரையாடல்

தங்கவேலாயுதபுர விவசாய அமைப்புடனான கலந்துரையாடலானது 2014.09.14, 27 ம் திகதிகளில் தங்கவேலாயுதபுர SOND பண்ணையில் நிறைவேற்றுப்பணிப்பாளரால் நடாத்தப்பட்டது இதில் 7 விவசாயிகள் கலந்து கொண்டுள்ளார்கள்

## பணியாளர் கலந்துரையாடல்

அலுவலக செயற்பாடுகள், தொடர்பான கலந்துரையாடல் 2014.09.17 ம் திகதி அலுவலகத்தில் நிறைவேற்றுப்பணிப்பாளரினால் நடாத்தப்பட்டது இதில் அக்கரைப்பற்று அலுவலகத்தினைச் சேர்ந்த 4 பணியாளர்கள் கலந்து கொண்டு செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடினார்கள்.

SOND

## பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு ஆக்கச் செயற்பாடு தொடர்பான பயிற்சிப்பட்டறை

கழிவுப் பொருட்களை பயன்படுத்தி ஆக்கச் செயற்பாடு தொடர்பாக ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கு தெளிவூட்டும் பயிற்சிப்பட்டறை 2014.09.21 ம் திகதி அன்று தம்பட்டை சுவாட் அமைப்பின் பயிற்சி கட்டடத்தில் நடைபெற்றது.

இலண்டண் சிவாசரிற்றி அமைப்பின் நிதியூட்டலுடன் அக்கரைப்பற்று சொன்ட் அமைப்பு முன்னெடுத்த வேலைத் திட்டமானது அமைப்பின் உத்தியோகத்தர் த..விஜயகுமார் தலைமையில் ஆரம்பமானது.

இச்செயலமர்வில் சிவாசரிற்றியின் ஸ்தாபகர் பொப் கிளிப்பின்றன் பிரதம அதிதியாகவும் எம்.ருவன்மாலி பெனான்டோ வளவாளராகவும் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் ஆற்றல் விருத்தியினை மேம்படுத்தல். கற்றல் வளர்ச்சியை ஊக்குவித்தல்இ கழிவுப்பொருட்கள் மூலமும் பலவகையான உற்பத்தி பொருட்களை மாணவர்கள் வடிவமைப்பதனால் அவர்களுடைய புதிய புதிய சிந்தனைகளை வெளிக்கொண்டு வருதல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாக வைத்து அவர்களுக்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு இச்செயலமர்வு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.





இதனைத் தொடர்ந்து 2014.09.22 ம் திகதி of America nursery school, Fomto nursery school, BEP nursery school ஆகிய பாலர் பாடசாலைக்கான களவிஜயமும் மேற் கொள்ளப்பட்டது.



**“We all will Create a Better World”**

## அதிகரித்துவரும் வீதி விபத்துக்களும், வீதிப்போக்குவரத்துச் சட்டங்களும்.

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்றில் இயங்கிவரும் சொண்ட் நிறுவனமானது சமூகப் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதனோடு தொடர்புடைய அனைத்துப் பங்குதாரர்களினுடைய ஒத்துழைப்புடன் அதற்குரிய விழிப்புணர்வுகளையும் மக்களுக்கு வழங்கிவருகின்றது. அந்தவகையில் “அதிகரித்துவரும் வீதி விபத்துக்களும், வீதிப்போக்குவரத்துச் சட்டங்களும்“ எனும் தலைப்பில் ஆய்வரங்கானது நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் 06/09/2014 (சனிக் கிழமை), காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

அக்கரைப்பற்று பொலிஸ் நிலயத்தின் மோட்டார் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி எ.என்.எம். நஜீப் அவர்கள் ஆய்வரங்கில் பங்குபற்றிய நாற்பதிற்கும் மேற்பட்ட ஆர்வலர்களுக்கு வீதி விபத்துக்கள், போக்குவரத்துச் சட்டங்கள் தொடர்பாக தெளிவுபடுத்தியதுடன் கேள்விநேரத்தின் போது ஆர்வலர்களினால் கேட்கப்பட்ட சந்தேகங்களுக்கும் பதிலுரைத்தார். அக்கரைப்பற்று சொண்ட் நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் த. விஜயகுமார் அவர்கள் இவ்வாய்வரங்கினை ஒருங்கிணைப்புச் செய்தார்.







“We all will Create a Better World”

SOND



## தொலைநோக்கு

“புதிய சமூகம் உருவாக்குவோம்”

## பணிநோக்கு

சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவு‘ட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.

**“We all will Create a Better World”**